தினமணி சென்னை 13

வெள்ளிக்கிழமை, 4 ஜனவரி 2019

# ஹாக்கி வீரர்களுக்கு சென்னையில் உலகத்தர பயிற்சி

சென்னை, ஜன. 3: ஹாக்கி வீரர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு சென்னையில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் விளையாட்டு மையத்தில் உலகத்தர பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் விளையாட்டு அறிவியல் மையத்தில் ஹாக்கி விளையாட்டுத் துறை இயக்குநராக இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் கேப்டனும், ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றவருமான வி.பாஸ்கரன் பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த அறிவிப்பை ராமச்சந்திரா விளையாட்டு மையத்தின் இயக்குநர் எஸ்.ஆறுமுகம் சென்னையில் வியாழக்கிழமை வெளியிட்டார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் ஆறுமுகம் கூறுகையில், ஹாக்கி வீரர்களுக்கு இந்த மையத்தின் மூலம் உலகத்தர பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதற்காக விரைவில் ஆஸ்ட்ரோ டர்ஃப் எனப்படும் செயற்கைப் புல்வெளி அமைக்கப்படவுள்ளது என்றார்.

இதைத் தொடர்ந்து வி.பாஸ்கரன் கூறுகையில், இந்த மையத்தில் பயிற்சி பெறும் ஹாக்கி வீரர்களின் உடல்வாகு, செயல்திறன் ஆகியவை அறிவியல் முறையில் மேம்படுத்தப்படும்.

கோல் கீப்பர்கள், தடுத்தாடுபவர்கள், மத்திய மற்றும் முன்னிலையில் ஆடும் வீரர்களுக்கு பிரத்யேக உத்திகள் கற்பிக்கப்படும். 10 வயது முதல் சிறுவர்களுக்கு ஊக்கமும், பயிற்சியும் அளிக்கப்படும்.

ஜூன் 2019-இல் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான தகுதிச் சுற்றில் பங்குபெறும் ஜப்பான், சீன நாட்டு ஹாக்கி குழுவுக்கு இந்த மையத்தில் உள்ள வசதிகள் வழங்கப்படும் என்றார்.